பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

01 02 2025 6 45

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- 2025-26-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.
- நகர்புற கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பொருளாதார ஆய்வறிக்கை உத்வேகம் அளிப்பதாக மத்திய அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.
- விளையாட்டு வீரர்களுக்கு தேவையான உதவிகளை மாநில அரசு செய்து வருவதால் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் தமிழக வீரர்கள் சாதனை படைத்து வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் செயற்கை இழை மூலமாக இணையதள வசதி வழங்கும் பணி விரைவில் நிறைவடையும் என்று மாநில அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.
- இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

**[]<<<>>>[]**

2025-26-ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.

இந்த பட்ஜெட்டை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்து உரையாற்றுகிறார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்றப் பின்னர் தாக்கல் செய்யப்படும் இரண்டாவது பட்ஜெட் இதுவாகும்.

மத்திய நிதி அமைச்சராக திருமதி நிர்மலா சீதாராமன் பொறுப்பேற்றப் பின்னர் அவர் தொடர்ந்து தாக்கல் செய்யும் எட்டாவது பட்ஜெட் இதுவாகும்.

மக்களவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அதன் நகல் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்படும்.

பட்ஜெட் தொடர்பாக திருமதி நிர்மலா சீதாராமன், ஏற்றுமதியாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், வேளாண் பொருளாதார நிபுணர்கள், தொழிற்சங்கங்கள், கல்வி, சுகாதார துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள், சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் நிதித்துறையைச் சேர்ந்த பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை நடத்தினார்.

2021-ஆம் ஆண்டு முதல் காகிதமில்லா பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

முன்னதாக நேற்று திருமதி நிர்மலா சீதாராமன் தமது அமைச்சகத்தின் செயலாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுடன் பட்ஜெட் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்த கூட்டத்தில் மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு பங்கஜ் சௌத்திரியும் கலந்து கொண்டார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் கட்டம் இம்மாதம் 13-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

இரண்டாவது கட்ட கூட்டத்தொடர் மார்ச் மாதம் பத்தாம் தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் நான்காம் தேதி நிறைவடையும் என்று மக்களவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

நகர்புற கட்டமைப்பை வலுப்படுத்துவதில் மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பொருளாதார ஆய்வறிக்கை மேலும் உத்வேகம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு மனோகர்லால் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடு முழுவதும் மெட்ரோ ரயில் சேவை ஆயிரம் கிலோ மீட்டரை கடந்திருப்பது நகர்புற போக்குவரத்தை விரிவாக்கம் செய்யப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது என்று கூறியுள்ளார்.

தூய்மை இந்தியா இயக்கத்தின் சாதனைகள் நாடு முழுவதும் தூய்மையான கலாச்சாரத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய முயற்சிகள் நீடித்த, நவீன வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் கனவை விரைவாக நிறைவேற்ற உதவும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2015-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பிரதமரின் நகர்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ஒரு கோடியே 18 லட்சம் வீடுகள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை 89 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஏழாயிரத்து 479 பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் திரு மனோகார்லால் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழக அரசு விளையாட்டு வீரர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருவதால் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் சாதனை படைத்து வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களைச் சேர்ந்த 436 கிராம பஞ்சாயத்துக்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக அவர் பேசினார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலம் போட்டிகளில் பங்கேற்பதற்காக 614 வீரர்களுக்கு சுமார் 12 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி வழங்கப்பட்டதன் காரணமாக அவர்களில் 113 பேர் பதக்கங்களை வென்று மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளதாக அவர் கூறினார்.

கடந்த ஒரு வருடத்திற்குள் மாநிலத்தில் உள்ள 12 ஆயிரத்து 525 பஞ்சாயத்துகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் இந்த மாதத்திற்குள் இரண்டாயிரத்து 500 மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டிலேயே குழந்தைப் பருவ புற்றுநோயை கண்டறியும் பணி தமிழ்நாட்டில்தான் நடைபெற்று வருவதாகத் கூறினார்.

தமிழக அரசுடன், அடையாறு புற்றுநோய்மருத்துவமனை மற்றும் பல்வேறு அமைப்புகள் இணைந்து புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் குறித்த பதிவேட்டை தயாரித்துள்ளதாகவும், தொடக்க நிலையிலேயே சிகிச்சை அளிக்க இது வசதியாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் புற்றுநோய் பாதிப்புகளை முழுமையாக கண்டறியும் பணி அரசின் சார்பில் தொடங்கப்பட்டு ஈரோடு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, கன்னியாகுமரி ஆகிய நான்கு மாவட்டங்களில் முடிவடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அனைத்து வருவாய் மாவட்டங்களிலும் புற்று நோய் பாதிப்புகளை கண்டறிய 27 கோடி ரூபாய் செலவில் பணிகள் தொடங்கப்பட உள்ளதாகவும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 500 கிராமங்களுக்கும் செயற்கை இழை மூலமாக இணையதள வசதி வழங்கும் பணி விரைவில் முடிவடையும் என்று மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் சேலத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் தகவல் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்து வரும் துறையாக உள்ளது என்று கூறினார்.

முதலமைச்சர் அறிவித்துள்ள ஒரு ட்ரில்லியன் பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு இந்த துறையின் பங்கு மிகவும் அவசியமானது என்பதால் மாநிலம் முழுவதும் இணைய வசதி வழங்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் உள்ள இளம் தலைமுறையினருக்கு அதிநவீன தொழில்நுட்பத்தை கற்றுத்தரும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டுள்ளதாகவும், இதனால் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணியில் உள்ள ஹைதராபாத், பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்கு இணையாக தமிழகத்தின் தகவல் தொழிலநுட்பத்துறையும் மிக வேகமாக வளர்ந்து வருவதாக அவர் கூறினார்.

[]<<<>>>[]

கடலோர காவல்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி கடலோர காவல்படை சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதையொட்டி பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய கடலோரக் காவல்படை அடுத்த ஐந்து ஆண்டுகளில் அதன் கப்பல்களின் எண்ணிக்கையை 200-ஆகவும், விமானங்களின் எண்ணிக்கையை நூறாகவும் அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கடலோரக் காவல்படை இன்று தனது 49-வது ஆண்டு விழாவையும் கொண்டாடுகிறது.

கடந்த ஓராண்டில் நாடு முழுவதும் 52 ஆயிரத்து 560 கோடி ரூபாய் மதிப்பிலான கடத்தல் பொருட்களை இப்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்

அண்மையில் அந்தமான் கடல் பகுதியில் சுமார் ஆறாயிரம் கிலோ போதைப்பொருளை இப்படையினர் பறிமுதல் செய்தனர்.

கடலோர காவல்படையின் சேவைத்திறன் அதிகரித்துள்ள நிலையில், உலகில் வலிமையான படையாக வளர்ந்துள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

கடலோரக் காவல்படையின் நிறுவன நாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திரமோடி, பாதுகாப்புத்துறை அசைமச்ர் திரு ராஜ்நாத்சிங் ஆகியோர் அப்படையினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

[]<<<>>>[]

டாலருக்கு மாற்றாக புதிய கரன்சியை உருவாக்க முயன்றால் பிரிக்ஸ் நாடுகள் மீது 100 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் எச்சரித்துள்ளார்.

[]<<<>>>[]

லெபனானில் ஹெஸ்புல்லா அமைப்பின் ஆயுத தொழிற்சாலை மீது இஸ்ரேல் விமானப்படை நேற்று தாக்குதல் நடத்தியது.

[]<<<>>>[]

கார்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை இலங்கை அரசு தளர்த்தியுள்ளது.

[]<<<>>>[]

50-க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கும் உலக புத்தக கண்காட்சி புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

[]<<<>>>[]

உத்திரபிரதேச மாநிலம் காஸியாபாத்தில் இன்று அதிகாலை எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற லாரியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

[]<<<>>>[]

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிறைவுபெற்ற திட்டங்களை மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவது குறித்து மாநில அமைச்சர் திரு சேகர்பாபு நேற்று அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

மயிலாடுதுறையில் புத்தகத் திருவிழாவை மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் நேற்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு காந்தி வழங்கினார்.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் பள்ளி மாணவர்கள் கண்களை துணியால் மூடிக்கொண்டு ஸ்கேட்டிங் செய்து பங்கேற்றனர்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் ரயிலில் கடத்தி வரப்பட்ட 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 45 கிலோ கஞ்சாவை ரயில்வே பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 15 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை வென்றது.

புனேயில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து இரண்டு பந்துகள் மீதம் இருக்கையில் 166 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா மூன்று – ஒன்று என்ற கணக்கில் தொடரை வென்றது.

[]<<<>>>[]

ஹாக்கி இந்தியா லீக் இறுதிப் போட்டிக்கு ஹைதராபாத் அணி தகுதி பெற்றுள்ளது.

ரூர்கேலாவில் நேற்று நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 3-1 என்ற கோல் கணக்கில் சூர்மா அணியை வென்றது.

இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று மும்பை - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் ட்டிராவில் முடிவடைந்தது.

**[]<<<>>>[]**

உத்தராகாண்டில் நடைபெற்று வரும் தேசிய விளையாட்டுப் போட்டியின் பதக்கப்பட்டியலில் மணிப்பூர் ஒன்பது தங்கம், ஏழு வெள்ளி, மூன்று வெண்கலம் உள்ளிட்ட 19 பதக்ககங்களுடனம் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

முப்படை அணி 18 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், 17 பதக்கங்களுடன் கர்நாடகா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

நான்கு தங்கம், ஐந்து வெள்ளி, ஐந்து வெண்கலம் என 14 பதக்கங்களுடன் தமிழகம் ஆறாவது இடத்தில் உள்ளது.

***End of News***